STC.No. 4182/2017, STC.No. 4183/2017

Dated : 04.06.2026

PW1- Sridhar Arasu

(Solemnly affirmed before this court under Act X of 1969)

எதிரி ஆஜர்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

கூடுதல் பிரமாண வாக்குமூலம் என்ன காரணத்திற்காக தாக்கல் செய்தீர்கள் என்று தெரியுமா என்றால் நான் ஏற்றுமதி செய்தததற்கான பில்கள் பிஎல் காபி ஆகிய அனைத்தும் இப்போது தான் கிடைத்தது ஆகவே நான் அதை தாக்கல் செய்துள்ளேன். நான் தற்போது 13 ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் தற்போது காண்பிக்கப்படும் 13 வது ஆவணத்தில் கையொப்பம் ஏதும் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. குறறம் சாட்டப்பட்டவரிடமிருந்து வரவேண்டிய அனைத்து அக்கவுண்ட்சும் இந்த ஆவணத்தில் உள்ளது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஸ்டேட்மென்ட்டில் உள்ள பாயிண்ட் 1 , 2 ற்கான ஆதாரங்களை சமர்பித்துள்ளேனா என்றால் சமர்பித்துள்ளேன். 3 வது பாயிண்ட்டிற்கான ஆதாரங்கள் ஏதும் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. மற்ற பாயிண்ட்டுகள் அனைத்தும் அதை சார்ந்து வரும் வட்டிக்கானவை என்றால் சரிதான். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் ஒரு ஸ்டேட்மெண்ட் காபி கொடுத்துள்ளீர்கள் பாயிண்ட் 1 மற்றும் 7 அகியவை புதிய பிரமாண வாக்குமூலத்தில் சேர்க்கப்பட்டுள்ளது என்றாலும் பழைய பிரமாணவாக்குமூலத்தில் அவை இல்லை என்றால் சரிதான். பிரமாணவாக்குமூலத்தில் 8 வது பத்தியில் எனது வங்கி கணக்கில் செலுத்தியது 64,875 ரூபாய் என்று போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புதிய பிரமாணவாக்குமூலத்தில் ஸ்டேட்மென்ட் ஆப் அக்கவுண்ட் 2 வது பக்கத்தில் எதிரியால் செலுத்தப்பட்டது 64,875 ரூபாய் என்று உள்ளது என்றால் கேஷ் ஆக கொடுத்ததுதான் சரி. ஆக்சிஸ் பேங்க் மேனேஜர் 1 கோடியே 24 லட்சத்து 19 ஆயிரத்து 556 ரூபாய் உங்களுடைய வங்கியில் வரவு வந்துள்ளது என்றால் சரிதான். எக்ஸ்போர்ட் செய்தது மற்றும் இந்தியாவில் இருந்து வந்த

தொகைகள் அனைத்தும் சேர்த்துதான் அது. கிருஷ்ணா எக்ஸ்போர்டில் இருந்து பணம் வந்ததை ஒப்புக்கொள்கிறீர்களா என்றால் ஒப்புக்கொள்கிறேன். நான் தாக்கல் செய்த 11 இன்வாய்சில் 9 இன்வாய்சிற்கு பணம் வந்துவிட்டது என்றாலும் 2 இன்வாசிற்குதான் பணம் வரவில்லை என்றால் சரிதான். யுஎஸ்ஏவில் உள்ள கிரானைட் இம்போர்ட்ஸ் ஐஎக்ஸ் ஆகியவை டாலர் கணக்கில் உள்ளது என்றால் சரிதான். ஆனால் இன்வாய்சில் வரவேண்டிய தொகையை குறிப்பிட்டுள்ளீர்களா என்றால் இல்லை. எனது கணக்கிற்கு டாலரில் தான் இந்த தொகை வந்தது என்றால் சரிதான். ஏற்றுமதி இறக்குமதிக்கான கணக்கீடு எண் உள்ளதா என்றால் உள்ளது. ஆக்சிஸ் பேங்க் மேலாளர் ஸ்விப்டு கோர் 36,988 யுஎஸ்டி வரவு வந்துள்ளது என்றாலும் அவை பேமெண்ட் பார் கிரானைட் என்று உள்ளது என்றாலும் அவை இந்த பணத்தில் 25 லட்சம் ரூபாய் என்றால் சரிதான். அது 10.01.2017 அன்று வந்துள்ளது என்றால் சரிதான். அந்த கடைசி 2 இன்வாய்சிற்கும் சரியான கோடிங்குடன் அதற்கான தொகைகள் சரியாக வந்துள்ளது என்றால் சரியல்ல. அவர் தரவேண்டிய 57 லட்சத்தில் 25 லட்சம் வந்துள்ளது. ஒரு கிரானைட் எக்ஸ்போர்டிற்காக வந்த தொகையை தனிப்பட்ட நபரின் கடனிற்காக கழிப்பது சரியா என்றால் அதை பேசி தான் நான் வாங்கினேன். 15.02.2014 அன்று தூம் கார்பரேஷன் மூலமாக உங்களுக்கு பணம் வந்துள்ளது என்றால் எதிரி அல்லாது 4, 5 நிறுவனங்களுக்கு நான் பரிவர்த்தனை செய்துள்ளேன். அதில் ஏதாவது ஒரு நிறுவனத்தில் இருந்து வந்த தொகைதான் அது. தூம் கார்பரேஷன் என்பது பணம் பரிவர்த்தனை செய்யும் நிறுவனம் அதன் மூலம் எதிரி பணம் பரிவர்த்தனை செய்துள்ளார் என்றால் இல்லை.

(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

K KARTHIK Digitally signed by K KARTHIK Date: 2026.06.04 13:41:44 +0530

**நீதித்துறை நடுவர்,**
**திருவொற்றியூர்**